**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்.**
**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ** L.L.M.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**

**2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் வியாழக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2055, குரோதி வருடம், பங்குனி திங்கள் 13 ம் நாள்**

**அசல் வழக்கு எண்.342/2020**
**CNR No. TNT107-000461-2020**

S. கிரிதரன்
த/பெ. காலம்சென்ற M.சோமசுந்தரம்
நிர்வாக அறங்காவலர்,
M.N.சிக்கண்ண செட்டியார் அறக்கட்டளை
S2 ஸ்ரீ வாரி விஜயம் அப்பார்ட்மெண்ட்
V.G.P அமுதா நகர், 2வது மெயின்ரோடு,
நெற்குன்றம், சென்னை 600 107 ..வாதி

,
..எதிர்..

1. M.N.சிக்கண்ண செட்டியார் அறக்கட்டளை,
   அதன் பிரதிநிதியாக K.வீரசெந்தில்,
   நிர்வாக அறங்காவலர்

2. திரு.K.வீரசெந்தில் – நிர்வாக அறங்காவலர்
   M.N.சிக்கண்ண செட்டியார் அறக்கட்டளை,

3. திரு.V.சிக்கண்ணன்– அறங்காவலர்,
   M.N.சிக்கண்ண செட்டியார் அறக்கட்டளை,

4. திரு.N.ரவீந்திரன் – அறக்காவலர்
   M.N.சிக்கண்ண செட்டியார் அறக்கட்டளை,

5. திரு.T.சீனிவாசன் –அறங்காவலர்
   M.N.சிக்கண்ண செட்டியார் அறக்கட்டளை ..பிரதிவாதிகள்

இவ்வழக்கு கடந்த 20.02.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.V.கிரி அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டும், வாதி தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள் மற்றும் வாதி தரப்பு எழுத்துமூலமான வாதுரைகளை பரிசீலித்தும், இதுநாள் வரை என் ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

## தீர்ப்புரை

வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை, செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் தாவா செலவுத்தொகை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

### 2. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம் :–

**2.1.** கடந்த 21.08.1959ம் தேதியில் 1வது பிரதிவாதி அறக்கட்டளையான M.N.சிக்கண்ணசெட்டியார் அறக்கட்டளை, காலம்சென்ற M.N.முருகப்பசெட்டியாரால் கொள்ளுதாத்தாவின் நினைவாக உருவாக்கி கடந்த 21.08.1959ம் தேதியிட்ட ஆவண எண்.45/1959/B4 ஆக கோயம்புத்தூர், சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. மேற்படி அறக்கட்டளைக்கு 5 ஏக்கர் நிலம் 251, பி.எஸ்.சுந்தரம் ரோடு, பாளையக்காட்டு, திருப்பூரில் அமைந்துள்ளது. அங்கு M.N..சிக்கண்ணசெட்டியார் மெட்ரிகுலேசன் பள்ளி மற்றும் M.N.முருகப்பசெட்டியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி அரசு உதவி பெறும் பள்ளி என்று இரு பள்ளிகள் உள்ளது.

**2.2**. 1ம் பிரதிவாதி அறக்கட்டளையின் விதியின்படி சிக்கண்ண செட்டியார் குடும்பத்தில் மூத்த ஆண் வாரிசு ஒருவரும், M.N.முருகப்பசெட்டியார் குடும்பத்தில் மூத்த ஆண் வாரிசு ஒருவரும் லீனியல் பிரைமோஜெனிசர் ( as per rule of lineal primogeniture ) விதிகளின்படி நிர்வாக அறங்காவலர்கள் அறக்கட்டளையில் நியமிக்கப்பட்டு அவர்களே தினசரி நிர்வாகம், வங்கி கணக்குகள் மற்றும் நிதிநிர்வாகம் மேற்கொள்ள வேண்டும்.

அறக்கட்டளையில் வாதியின் தந்தை அவரது ஆயுள் காலத்தில் ஒரு நிர்வாக அறங்காவலராக இருந்தார். கடந்த 1974ம் ஆண்டு அவர் இறந்ததற்கு பின்னிட்டு வாதியின் குடும்பத்திலிருந்து யாரும் மேற்படி அறக்கட்டளையில் அறங்காவலராக நியமிக்கப்படவில்லை.

**2.3** மேற்படி அறக்கட்டளை குறித்த விபரம் 2011ம் வருடம் வாதி குடும்பத்தின் பாகப்பிரிவினையின்போது வாதிக்கு தெரியவந்தது. மேற்படி அறக்கட்டளையில் 2013ம் ஆண்டு நிர்வாக அறங்காவலராக வாதி நியமிக்கப்பட்டார். 2ம் பிரதிவாதி மற்றொரு நிர்வாக அறங்காவலராகவும், 3 முதல் 5 பிரதிவாதிகள் அறங்காவலராகவும் விளங்கினார்கள். 1வது பிரதிவாதியான அறக்கட்டளை அதன் செயல்விதிகள்படி செயல்படவில்லை. 2013க்கு முன் முறையான வரவு செலவு கணக்குகள் பராமரிக்கப்படவில்லை.

**2.4** வாதி சென்னையில் வசித்து வருகிறார். வாதியின் பூர்வீக வீடு திருப்பூரில் இருந்தது. வாதி பெறுப்பேற்ற பிறகு 25.10.2013ம் தேதியன்று நடைபெற்ற அறக்கட்டளை கூட்டத்தில், அறக்கட்டளைக்கு SBI ஓவர்சீஸ் வங்கி திருப்பூரில் தொடங்கப்பட்டு அதனை அறக்கட்டளை விதிகளின்படி நிர்வாக அறங்காவலர்களான வாதியும், 2ம் பிரதிவாதியும் செயல்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எவரேனும் இருவர் இணைந்து வங்கி கணக்கினை இயக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**2.5** கடந்த 20.12.2013ம் தேதியன்று வாதி, 2ம் பிரதிவாதி மற்றும் 5ம் பிரதிவாதி ஆகியோர்களில் எவரேனும் இருவர் இணைந்து வங்கி கணக்கை இயக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்படி தீர்மானம் அறக்கட்டளை விதிகளுக்கு முரணானது. மேற்படி தீர்மானம் இயற்றியபோது இது தற்காலிகமாக நிறைவேற்றப்பட்டதாகவும், திருப்பூருக்கு வாதி குடிபெயர்ந்தவுடன் அதனை ரத்து செய்து விட்டு, அறக்கட்டளை விதிகளின்படி நிர்வாக அறங்காவலர்கள் இயங்க தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று கூறி வாதியின் ஒப்புதலை பெற்றார்கள்.

**2.6** கடந்த 04.01.2014ல் தேதியன்று 1ம் பிரதிவாதி அறக்கட்டளை கூட்டத்தில் மேற்படி தீர்மானம் போல் மற்றொன்றும் நிறைவேற்றப்பட்டது. கடந்த 12.02.2014ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி அறக்கட்டளை கூட்டத்தில் அறக்கட்டளை விதிகளுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1ம் பிரதிவாதி அறக்கட்டளையின் விதி 33 மற்றும் 34ன் படி அனைத்து பள்ளி மற்றும் அறக்கட்டளை நிர்வாகம் வரவு, செலவு மற்றும் வங்கி கணக்குகளை இயக்கும் அதிகாரம் நிர்வாக அறங்காவலர்களுக்கு மட்டும் உள்ளது.

**2.7** 5வது பிரதிவாதி அனைத்து பள்ளிகளின் வரவு செலவுகள் மற்றும் வங்கி கணக்குகளை இயக்கும் அதிகாரம் வழங்கியது, 1ம் பிரதிவாதியின் அறக்கட்டளையின் விதிகளுக்கு முரணானது. 2013ம் ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் ஏற்பட்ட தீர்மானத்தின்படி அரசு உதவி பெறும் பள்ளியின் செயலாளராக வாதி நியமிக்கப்பட்டார். மேற்படி பள்ளியின் செயல்பாடுகளை பிரதிவாதிகளின் வசம் வைத்துக்கொள்ள அரசு உதவி பெறும் பள்ளிக்கு பணம் தராமல் பிரதிவாதிகள் இழுத்தடித்தார்கள்.

**2.8** மெட்ரிக்குலேசன் பள்ளியின் பணவிவகாரங்கள் 2 மற்றும் 5ம் பிரதிவாதியின் கட்டுப்பாட்டில் உள்ளது அறக்கட்டளை விதிகளுக்கு முரணானது. பிரதிவாதிகள் அரசு உதவி பெறும் பள்ளியில் சுயநிதி பிரிவான +1, +2 ஆகியவற்றின் வரவு செலவு கணக்குகளை அவர்கள் வசம் கொண்டு வர வேண்டுமென்று எண்ணி வாதியின் நிர்வாகத்தில் நேரடியாக இடையூறு செய்தார்கள்.

**2.9** வாதி செயலாளராக உள்ள அரசு உதவி பெறும் பள்ளி நிர்வாகத்தை கடந்த 12.02.2014ம் தேதி ஏற்படுத்தப்பட்ட தீர்மானத்தை மீறி அரசு உதவி பெறும் பள்ளி நிர்வாகத்தில் பிரதிவாதிகள் தலையிட ஆரம்பித்தார்கள். கடந்த 30.03.2022 மற்றும் 12.01.2023ம் தேதியன்று நடைபெற்ற அறக்கட்டளை கூட்டங்களில் இனிமேல் வாதிக்கு எந்த பள்ளியின் நிர்வாகத்திலும் பொறுப்பும் வழங்க கூடாது என நிர்வாக

அறங்காவலர் பதவிக்கு எதிராகவும், சட்ட விதிமுறைகளுக்கு புறம்பாகவும் பிரதிவாதிகள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

**2.10** இவ்வாறு அறக்கட்டளை விதிகளுக்கு புறம்பாக செயல்பட்டு வரும் 2 முதல் 5 பிரதிவாதிகளிடம் வாதி ஆட்சேபனை தெரிவித்ததால் அவர்கள் கடந்த 25.03.2019ல் அறக்கட்டளை கூட்டத்தை கூட்டி, அதில் அரசு உதவி பெறும் பள்ளியின் செயலர் பொறுப்பில் இருந்து நீக்கினர். 1வது பிரதிவாதி அறக்கட்டளையின் விதியின்படி விதி மீறல். வாதி W.P No.35754/19 என்ற ரிட் மனுவினை மாவட்ட கல்வி அலுவலர் மீது தொடுத்துள்ளார். வாதியின் ஆட்சேபனை கடிதத்தின் மீது வாதியிடம் விசாரிக்காமல் மற்றொருவரை பள்ளி குழுமத்திற்கு செயலாளர் ஆக ஒப்புதல் அளித்தது செல்லாது என்று மனு அளித்திருந்தார். அது தமிழ்நாடு சுயநிதி பள்ளிகள் வரன்முறை சட்டம் 1973க்கு புறம்பானது. மேற்படி மனு உயர்நீதிமன்றத்தால் வேறு காரணங்களால் தள்ளுபடி செய்யப்பட்டது.

**2.11** கடந்த 25.03.2019ம் தேதியிட்ட தீர்மானம் அறக்கட்டளை விதிகளுக்கு முரணானதால் அது செல்லத்தக்கதல்ல. கடந்த 29.10.2020ம் தேதியில் வாதி அறக்கட்டளை கூட்டம் குறித்து மின் அஞ்சல் மூலம் 2வது பிரதிவாதியிடம் கேட்டபின் அவர் 31.12.2020ல் கூட்டத்தை கூட்டுவதாக அறிவிப்பு செய்தார். மேற்படி கூட்டத்திலும் 1வது பிரதிவாதியின் விதிமுறைகளுக்கு புறம்பாக அரசு உதவி பெறும் பள்ளி செயலாளராக வாதியை நீக்கிவிட்டு நியமிக்கப்பட்ட 3வது பிரதிவாதியை நியமித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவ்வழக்கில் வாதியின் இடைக்கால மனுவில் கேட்டது போல் எவ்வித உத்தரவும் இல்லாததால் அவரை பள்ளியின் செயலாளராக தொடர பிரதிவாதிகள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

**2.12** பிரதிவாதிகள் மற்றும் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் மூலம் நிர்வாக அறங்காவலரான வாதியை அவமானப்படுத்தி கொண்டிருக்கிறார்கள். பிரதிவாதிகள், இரு பள்ளி தலைமை

ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் வாதியை எவ்வித தகவல் பரிமாற்றம் மற்றும் ஆவணங்கள், அறிக்கைகள் அவர்கள் அனுமதியின்றி தரக்கூடாது என்றும், வாதியின் கடிதத்திற்கும் பதில் அளிக்ககூடாது எனவும் உத்தரவிட்டு அதனை பணியாளர்கள் செயல்படுத்துகிறார்கள்.

**2.13** பிரதிவாதிகளின் ஒத்துழையாமையாலும், அவமானப்படுத்தலினாலும் 1வது பிரதிவாதி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலராக இந்த பள்ளிகளில் வாதியின் கடமைகளை ஆற்ற இயலவில்லை. வாதி வங்கிக்கு நேரடியாக கடிதம் மூலமாக வங்கி கணக்கினை இயக்கும் நபர்களை அறக்கட்டளை விதிப்படி மாற்றவேண்டும் என கேட்டபோது, பிரதிவாதிகளின் ஆளுமையால் வங்கி அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையோ பதிலோ தரவில்லை. எனவே பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** பிரதிவாதிகள் தரப்பில் அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டு, அவர்களுக்கு எதிராக கடந்த 17.10.2023 ம் தேதியன்று ஒருதலைபட்ச உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**4.** இவ்வழக்கில் வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துப்பூர்வமான வாதுரை பரிசீலிக்கப்பட்டது.

**5.** தாவாவில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா என்பதே இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினையாகும்.

**6 . தீர்வு :**

**6.1** கடந்த 21.08.1959ம் தேதியிட்ட ஆவண எண்.45/1959ஆக பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளை பத்திரப்படி M.N.சிக்கண்ணசெட்டியார் அறக்கட்டளையான

1ம் பிரதிவாதி அறக்கட்டளையானது உருவாக்கப்பட்டதாகவும், அதில் M.N.சிக்கண்ணாசெட்டியார் மெட்ரிக்குலேசன் பள்ளி மற்றும் M.N.முருகப்பசெட்டியார் அரசு உதவி பெறும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய இரு பள்ளிகள் செயல்படுவதாகவும், 1ம் பிரதிவாதி அறக்கட்டளையின் விதிகள்படி M.N.சிக்கண்ணசெட்டியார் குடும்பத்தில் மூத்த ஆண் வாரிசு ஒருவரும், M.N.முருகப்பசெட்டியார் குடும்பத்தில் மூத்த ஆண் வாரிசு ஒருவரும் நிர்வாக அறங்காவலராக மேற்படி அறக்கட்டளையில் நியமிக்கப்பட வேண்டுமென்றும், அவ்வாறு வாதியின் தந்தை அவரது ஆயுட் காலத்தில் ஒரு நிர்வாக அறங்காவலராக செயல்பட்டதாகவும், கடந்த 1974ம் ஆண்டு அவரது இறப்பிற்கு பின்னிட்டு வாதியின் குடும்பத்தினருக்கு 1ம் பிரதிவாதி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர்களாக நியமிக்கப்படவில்லை என்றும், வாதி குடும்பத்தில் 2011ம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினையின் போது 1ம் பிரதிவாதி அறக்கட்டளை பற்றி வாதிக்கு தெரிய வந்து, 2013ம் ஆண்டு 1ம் பிரதிவாதி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலராக வாதியும், 2ம் பிரதிவாதியும் நியமிக்கப்பட்டதாகவும், 3 முதல் 5 பிரதிவாதிகள் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டதாகவும், கடந்த 20.12.2013, 04.01.2014, 12.02.2014 மற்றும் 25.03.2019 ஆகிய தேதிகளில் 1ம் பிரதிவாதி அறக்கட்டளையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மேற்படி 21.08.1959ம் தேதியிட்ட அறக்கட்டளை பத்திரத்திற்கு எதிரானது என்றும், ஆகையால், மேற்படி தீர்மானங்களை செல்லாது, இல்லா நிலையது என்று விளம்புகை பரிகாரம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2** வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் குறித்து பரிசீலிக்கும்போது, கடந்த 20.12.2013ம் தேதியன்று 1ம் பிரதிவாதியின் அறக்கட்டளையில் நிறைவேற்றப்பட்ட அயிட்டம் 1 தீர்மானத்தில் வாதி, 1ம் பிரதிவாதி ஆகியோர்கள் நிர்வாக அறங்காவலர்களாகவும், 3 முதல் 5 பிரதிவாதிகள் அறங்காவலர்களாகவும் இருந்து **1ம் பிரதிவாதி அறக்கட்டளைக்காக வங்கி கணக்கு தொடங்குவதற்கும், அதனை நிர்வாக அறங்காவலர்களான வாதியோ அல்லது 1ம் பிரதிவாதியோ இயக்கலாம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

The above mentioned amendment is carried-out by this court sumotto as per section 151 & 152 of CPC

**6.3** கடந்த 21.08.1959ம் தேதியிட்ட வா.சா.ஆ.1 அறக்கட்டளை பத்திரம், விதி 33ன் படி கல்வி நிறுவனங்களை நிர்வகிக்கும் பொருட்டு மேற்படி இரண்டு நிர்வாக அறங்காவலர்களுக்கும் முழு அதிகாரம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வாதி மற்றும் 2ம் பிரதிவாதி இருவருமே 1ம் பிரதிவாதி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர்கள் என்பதால் மேற்படி இருவருக்கும் சேர்ந்து தான் 1ம் பிரதிவாதி அறக்கட்டளையை நிர்வகிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி வா.சா.ஆ.1 அறக்கட்டளை பத்திரம் விதி 33க்கு எதிராக வாதியோ அல்லது 2ம் பிரதிவாதியோ அறக்கட்டளை வங்கி கணக்கை இயக்கலாம் என்று ஏற்படுத்தியுள்ள கடந்த 20.12.2013ம் தேதியிட்ட அயிட்டம் எண்.1 தீர்மானம் 1ம் பிரதிவாதி அறக்கட்டளை விதிகளுக்கு முரணானது.

**6.4** கடந்த 04.01.2014ம் தேதி 1ம் பிரதிவாதி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர்களான வாதியோ, 2ம் பிரதிவாதியோ அல்லது அறங்காவலரான 5ம் பிரதிவாதியோ மேற்படியாளர்கள் யாரேனும் இருவர் சேர்ந்து 1ம் பிரதிவாதி அறக்கட்டளையின் வங்கி கணக்கை இயக்கலாம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி அறக்கட்டளையின் பத்திரமான வா.சா.ஆ.1ல் நிர்வாக அறங்காவலர்களுக்கு மட்டுமே அறக்கட்டளையை நிர்வகிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளதால் அதனை அறங்காவலரான 5ம் பிரதிவாதிக்கு வழங்கியதும், அதேபோல் மேற்படி நபர்களில் யாரேனும் இருவர் சேர்ந்து அறக்கட்டளையின் வங்கிக்கணக்கை இயக்கலாம் என்று ஏற்படுத்தியுள்ள தீர்மானம் மேற்படி வா.சா.ஆ.1 அறக்கட்டளை பத்திரத்திற்கு முரணானது.

**6.5** கடந்த 12.02.2014ம் தேதி 1ம் பிரதிவாதி அறக்கட்டளை செயற்குழு கூட்டத்தில் M.N.சிக்கண்ண செட்டியார் மெட்ரிக்குலேசன் பள்ளியை நிர்வாக இயக்குநர்களில் ஒருவரான 2ம் பிரதிவாதி மட்டும் தனித்து நிர்வாகிக்க வேண்டுமென்றும் M.N.முருகப்பசெட்டியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியை வாதி

நிர்வாகிக்க வேண்டுமென்றும், மேற்படி இரு பள்ளிகளில் வரவு செலவு கணக்குகளை 5ம் பிரதிவாதி கவனிக்க வேண்டுமென்றும், நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களானது, 1ம் பிரதிவாதி அறக்கட்டளையின் நிர்வாகத்தை வாதி மற்றும் 2ம் பிரதிவாதி இருவரும் சேர்ந்து தான் நிர்வாகிக்க வேண்டுமென்று வா.சா.ஆ.1 அறக்கட்டளை பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள விதி 33க்கு எதிரானது. அதேபோல் கடந்த 23.05.2019ம் தேதி வாதியின் பதிவிக்காலம் முடிவடைந்து விட்டதாக குறிப்பிட்டு M.N.முருகப்பசெட்டியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் செயலாளராக 3ம் பிரதிவாதி நியமிக்கப்பட்டு1ம் பிரதிவாதி அறக்கட்டளையின் செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**6.6** மேற்படி தீர்மானத்திற்கு வாதியானவர் அவரது ஆட்சேபனையை பதிவு செய்திருந்தும் அது பொறுத்து பிரதிவாதிகள் தரப்பில் பரிசீலிக்கப்படவில்லை. வா.சா.ஆ.1 அறக்கட்டளை பத்திரம் விதி 33ன் படி M.N.சிக்கண்ணசெட்டியார் குடும்பத்தை சேர்ந்த ஆண் வாரிசு மற்றும் M.N.முருகப்பசெட்டியார் குடும்பத்தை சேர்ந்த ஆண் வாரிசுகளுக்கே மேற்படி அறக்கட்டளையை நிர்வாகிக்கும் பொறுப்பும் உரிமையும் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி அறக்கட்டளை பத்திரத்திற்கு முரணாக மூன்றாம் நபர் மேற்படி 1ம் பிரதிவாதி அறக்கட்டளை நிர்வாகிக்க முடியாது. எனவே வா.சா.ஆ.10 வரிசையான கடந்த 20.12.2013, 04.01.2016, 12.02.2016 மற்றும் 25.03.2019 ஆகிய தீர்மானங்கள் வா.சா.ஆ.1 அறக்கட்டளை பத்திரத்திற்கு எதிரானது என்று முடிவு செய்து, திருப்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 21.08.1959ம் தேதி ஆவண எண்.45/1959/B-4 பக்கம் 253-265 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள அறக்கட்டளை பத்திரப்படி வாதியும், 2ம் பிரதிவாதியும் சேர்ந்து 1ம் பிரதிவாதி அறக்கட்டளையை நிர்வாகிக்க வேண்டுமென்றும், 1ம் பிரதிவாதி அறக்கட்டளையின் பள்ளிக்கூடங்கள், நிதிகள் மற்றும் அதன் மற்ற செயல்பாடுகள் அனைத்திலும் பங்கேற்பதற்கு வாதிக்கு உரிமையுள்ளதாக முடிவு செய்யப்பட்டு அதன் சுவாதீனத்தில் வாதி மற்றும் 2ம் பிரதிவாதி கூட்டாக உள்ளதாகவும், அதனை பிரதிவாதிகளோ அவரது

முகவர்களோ, வேலையாட்களோ இடையூறு செய்யக்கூடாது என்று அவர்களுக்குஎதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

முடிவில், <u>தாவா கீழ்க்கண்டவாறு அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.</u>

(i) திருப்பூர், சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 21.08.1959ம் தேதி ஆவண எண்.45/1959/B-4 பக்கம் 253-265 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள அறக்கட்டளை பத்திரத்திற்கு முரணாக 1ம் பிரதிவாதி அறக்கட்டளையின் செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றிய கடந்த 20.12.2013ம் தேதியிட்ட அயிட்டம் எண்.1 தீர்மானம், 04.01.2014, 12.02.2014 மற்றும் 25.03.2019 ஆகிய தேதிகளிட்ட தீர்மானங்கள் செல்லாது மற்றும் இல்லா நிலையது மற்றும் அது மேற்படி அறக்கட்டளை பத்திரத்திற்கு முரணானது என்று விளம்புகை செய்தும்,

(ii) திருப்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 21.08.1959ம் தேதி ஆவண எண்.45/1959/B-4 பக்கம் 253-265 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள அறக்கட்டளை பத்திரப்படி வாதியும், 2ம் பிரதிவாதியும் சேர்ந்து 1ம் பிரதிவாதி அறக்கட்டளையை நிர்வாகிக்க வேண்டுமென்றும், 1ம் பிரதிவாதி அறக்கட்டளையின் பள்ளிக்கூடங்கள், நிதிகள் மற்றும் அதன் மற்ற செயல்பாடுகள் அனைத்திலும் பங்கேற்பதற்கு வாதிக்கு உரிமையுள்ளதாக முடிவு செய்யப்பட்டு அதன் சுவாதீனத்தில் வாதி மற்றும் 2ம் பிரதிவாதி கூட்டாக உள்ளதாகவும், அதனை பிரதிவாதிகளோ அவரது முகவர்களோ, வேலையாட்களோ இடையூறு செய்யக்கூடாது என்று அவர்களுக்குஎதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

(iii) தரப்பினர்களின் உறவுமுறையை கருத்தில்கொண்டு செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்பு அவையறியப் பகரப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2025.04.08 15:12:10 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**வாதி தரப்பு சாட்சிகள்** :

வா.சா. 1 – கிரிதரன்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்** :

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 21.08.1959 | 1ம் பிரதிவாதி டிரஸ்டின் பதிவு ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | – | 25.10.2013 முதல் 15.04.2016 தேதிகளில் 1ம் பிரதிவாதி டிரஸ்டில் ஏற்படுத்தப்பட்ட தீர்மானங்கள் | உண்மை நகல் |
| வா.சா.ஆ.3 | 09.01.2019 | 1ம் பிரதிவாதி டிரஸ்டின் தீர்மானம் | ஒளி நகல் |
| வா.சா.ஆ.4 | 27.03.2019 | முருகப்பசெட்டியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வசூலிக்கப்பட்ட கட்டண விவரங்கள் | நகல் |
| வா.சா.ஆ.5 | 05.04.2019 | வாதி State Bank of India விற்கு அனுப்பிய கடிதம் மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |
| வா.சா.ஆ.6 | 27.04.2019 | வாதி, பிரதிவாதிகளுக்கு அனுப்பிய கடிதம் அஞ்சலக ரசீதுடன் | அசல் |
| வா.சா.ஆ.7 | – | 27.09.2016 முதல் 17.12.2020 தேதிகளில் இ மெயில் விவரங்கள் இந்திய சாட்சிய சட்டம் 65பி (4)ன் படி சான்றிதழுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | கணிணி நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.8 | 10.05.2019 | முருகப்பசெட்டியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் வாதிக்கு எழுதிய கடிதம் கவருடன் | அசல் |
| வா.சா.ஆ.9 | 01.11.2019 | தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட விவரங்கள் கவருடன். | அசல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

A SUBASHRI Digitally signed by A SUBASHRI Date: 2025.04.08 15:12:19 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.